# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



## நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. சி.பாஸ்கரத்தொண்டைமான்

ந.க.எண்.695/2017/விம நாள்: 17.11.2017

பொருள்: மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் – விழுப்புரம் மண்டலம் – விழுப்புரம் மாவட்டம் – உளுந்தூர்பேட்டை வட்டம் – திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் – திருநாவலூர் ஊராட்சி மற்றும் கிராமம் – ச.எண்கள்.158/2A2B, 158/3A மற்றும் 160/5B3B- ஆகியவற்றில் உள்ளடங்கிய 3.55.28 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1) வட்டார வளர்ச்சி அலுவலர், திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித ந.க.எண்.ஆ1/128/2015 நாள்:24.02.2017
2) மனுதாரர் திரு.கோபி அய்யாசாமி மற்றும் R.கோபாலன் ஆகியோர்களின் விண்ணப்பம் நாள்:29.05.2017
3) அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 16.06.2003.
4) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/LA2, நாள்19.04.2012 மற்றும் 24.05.2012.
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14619/1988/பிசிசி, நாள் 27.04.1988.
6) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.40483/2000/எல் ஏ2, நாள்: 07.11.2002.
7) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.16985/2000/எல்ஏ2, நாள் 29.09.2007.
8) வட்டார வளர்ச்சி அலுவலர், திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் எண்.அ2/2347/2017 நாள்:30.10.2017 மற்றும் மன்றத் தீர்மானம் எண்.69 நாள்:25.10.2017
9) வேளாண்மை இணை இயக்குநர், விழுப்புரம் அவர்களின் கடித எண்.இ5/10540/2017 நாள்:01.09.2017
10) இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்:09.11.2017 (நன்னிலை வரி செலுத்தக் கோரியது)
11) மனுதாரர் நன்னிலை வரி செலுத்தி விபரம் பெறப்பட்ட நாள்:13.11.2017
12) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12544/2014/சிபி, நாள் 04.07.2014.

-----

உத்திரவு:

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம், திருநாவலூர் ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண்கள்.158/2A2B, 158/3A மற்றும் 160/5B3B- ஆகியவற்றில் உள்ளடங்கிய 3.55.28 ஹெக்டேர் பரப்பு கொண்ட இடத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் கோரி பார்வை 1–ல் காணும் கடிதத்துடன்

பெறப்பட்ட விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனைப்பிரிவில் அமையும் உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்காவினை திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் தானப்பத்திரம் எண்.1256/2017 நாள்:24.10.2017–ன் படி ஒப்படைப்பு செய்து அதற்கான விபரம் மற்றும் திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் ஆகியவற்றுடன் பெறப்பட்டுள்ளது.

பார்வை (10)ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் உத்தேச மனைப்பிரிவு ஒப்புதல் குறித்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி கட்டணம் செலுத்த கோரப்பட்டு பார்வை (11)ல் காணும் மனுதாரர் கடிதத்தில் நன்னிலை வரி கட்டணமாக ரூ.49,800/–(ரூபாய் நாற்பத்து ஒன்பதாயிரத்து எண்ணூறு மட்டும்) SBI, விழுப்புரம் கிளையில் 10.11.2017 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ(விம)எண்.**105 /2017** என எண்ணிடப்பட்டு இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், பார்வை (4) மற்றும் (5)ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதங்களில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பார்வை (3)ல் காணும் அரசாணையின்படி இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(இ),(உ)குறித்து உறுதி செய்த பின்னரே உள்ளாட்சி மன்றம் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது, மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)–ன்படி, அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms.No.71, RDLA dated 16.06.2003 & G.O.No.134,M.A.WS, dated 20.09.2002 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

EWS மனைகள் பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மேற்படி மனைகளை (மனை எண்கள். 103 முதல்105 வரை,108 முதல் 143 வரை, 147 முதல் 153 வரை மற்றும் 157 முதல் 164 வரை) மனை உட்பிரிவு/மனை ஒருங்கிணைப்பு/மனை உபயோக மாற்றம் செய்யக்கூடாது.

பார்வை (8)ல் காணும் ஊராட்சி ஒன்றிய மன்ற தீர்மானம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்கா இடத்தினை தனி புல உட்பிரிவு பெற ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| ஒதுக்கீடு விபரம் | பரப்பளவு | | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு: | 3.55.28 ஹெக்டேர் | | |
| ஒதுக்கிய மனைகள்: | 164 [இவற்றில் எளியோர் வாழும் குடியிருப்பு மனைகள் (Economically Weaker Section Plots) (மனை எண்கள். 103 முதல்105 வரை,108 முதல் 143 வரை, 147 முதல் 153 வரை மற்றும் 157 (முதல் 164 வரை) | | |

**பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு தானமாக மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டவை**

| | | | |
|---|---|---|---|
| பூங்கா – I | 1676.67 சமீ | 3799.13 சமீ | ---10.69% |
| பூங்கா – II | 1583.16 சமீ | | |
| பூங்கா – III | 539.30 சமீ | | |
| திறவிடம் | 755.07 சமீ | | |

**மனுதாரர் விற்பனைக்குரியது**

| | | | |
|---|---|---|---|
| கடை –I | 181.86 சமீ | 364.00 சமீ | ---1.02% |
| கடை –II | 182.14 சமீ | | |

**சிறப்பு நிபந்தனைகள்:**

1) பார்வை 11–ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சிறப்பு நிபந்தனையின்படி "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பத்தாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

2) உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா என்பதை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3) மனுதாரரால் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் பூங்கா பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சியின் சொத்து கணக்கில் பதிவு செய்யப்பட்டதன் விவரத்தினை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் உறுதி செய்து கொள்ள வேண்டும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளை மனுதாரர் மற்றும் உள்ளாட்சி கடைபிடிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

4) மனைகள் மற்றும் சாலைகள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ/ந.ஊ.உ.இ(விம) எண். 105/2017 எண்ணிடப்பட்டுள்ள வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.

திருநாவலூர் ஊராட்சி ஒன்றியத்தால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திர பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உத்தேச மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம், மனைப்பிரிவு வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு வட்டார வளர்ச்சி அலுவலர், திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், உத்தேச மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட ஆணையின் நகலையும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர், திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு
ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் –2 தொகுப்பு

17/11/2017

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
விழுப்புரம் மண்டலம்,
விழுப்புரம்.

17/11/2017

பெறுநர்:
வட்டார வளர்ச்சி அலுவலர்,
திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம்,
உளுந்தூர்பேட்டை வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

நகல்:
Thiru.Gopi Ayyaswamy & R. Gopalan
187, Sixth Main Road,
Nagappa Nagar,
Chrompet,
Chennai - 44

திருநாவலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.ஜே.கண்ணன் பி.எஸ்.சி.,

ந.க.எண்:ஆ2/2347/2017 நாள்.28/12.2017

பொருள்: மனை பிரிவு – திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் – திருநாவலூர் ஊராட்சி – சர்வே எண்கள் 158/2A. 2B. 158/3A, 160/5B3B ஆகியவற்றில் உள்ளடக்கிய 3.55.28 ஹெறக்டோ/8.76 ஏக்கர் பரப்பளவு அமைந்துள்ள "நாயன்மார் சுந்தரர் நகர்" என்ற மனைபபிரிவிற்கு ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – சார்பு.

பார்வை:
1. விழுப்புரம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் கடிதம் ந.க. எண்.695/2017 விம நாள் 03.10.2017.
2. விழுப்புரம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் நடவடிக்கைகள் எண்.695/2017 விம நாள் 17.11.2017.
3. அரசு ஆணை எண் 255 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நாள்:18.08.1997.
4. சார்பதிவாளர் அலுவலகம், திருநாவலூர் அவர்களின ஆவண எண். 1256/2017.

-----

உத்திரவு:

பார்வை 1,2–ல் காணும் கடிதங்களின்படி விழுப்புரம் மாவட்டம், திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் ஊராட்சி சர்வே எண்கள் 158/2A. 2B. 158/3A, 160/5B3B ஆகியவற்றில் உள்ளடக்கிய 3.55.28 ஹெறக்டோ/8.76 ஏக்கர் பரப்பளவு அமைந்துள்ள "நாயன்மார் சுந்தரர் நகர்" என்ற மனைப்பிரிவிற்கு இதன் மூலம் பின்வரும் ஆவணங்கள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1) பார்வை 2–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் கண்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளை முழுவதும் பின்பற்றி மனைப்பிரிவு அமைக்கப்பட வேண்டும். மேற்படி நிபந்தனைகளை எக்காரணம் கொண்டும் மனைப்பிரிவு மேம்பாட்டு அலுவலர்கள் மீறி செயல்படுவது தெரியவந்தால் இந்த அனுமதி எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

2) நிலம் உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானதல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு. வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

3) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பத்தாரருக்கு சொத்தில
மீது உள்ள உரிமையினை எந்த நபரும் தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதன்மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொறுத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் பெற்றுக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய ஊரக வளர்ச்சித்துறை மற்றும் தொடாபுடைய ஊராட்சி மற்றும் ஒன்றிய நிர்வாகம் பொறுத்தமான அமைப்பு அல்ல.

4) உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள், கழிவுநீர் கால்வாய்கள், தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் குறித்து உள்ளாட்சி அமைப்பு நிர்வாகம் அவ்வப்போது ஆய்வுகள் மேற்கொள்ளும். ஆய்வில் திருப்திகராமான நிலை இல்லலையெனில் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட உத்தரவுகள் இரத்து செய்யப்படும்.

5) உத்தேச மனைப்பிரிவிற்கு செலுத்தப்படும் உரிமைக் கட்டணங்களில் நிலுவை உள்ளதென உள்ளாட்சி நிர்வாகம் ஏதேனும் அறிவிப்பு அளித்தால் அதனை ஒருவார கால அவகாசத்தில் செலுத்த தவறினால் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

6) மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சி அமைப்பிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

7) உள்ளாட்சி அமைப்பிற்கு தானமாக அளிக்கப்படும் நிலங்களை மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தாலோ அல்லது. விற்பனை செய்தாலோ அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பரிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

8) மனைப்பிரிவின் நுழைவாயிலில் 6 X 4 –க்கு குறையாமல் மனைப்பிரிவின் வரைபடம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். மனைகள் மற்றும் சாலைகள் எண்ணிடப்பட்டு வரைபடத்தின்படி எல்லை கற்கள் நடப்பட வேண்டும். தவறினால் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

9) இம்மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதிகளை தெருமட்டத்திற்கு மனைப்பிரிவு மேம்பாட்டாளர் தனது சொந்த செலவில் உயர்த்திட வேண்டும்.

10) பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் EWS மனைகளை மாற்றியமைக்கவோ ஒருங்கிணைக்கவோ கூடாது.

மேற்காணும் நிபந்தனைகள் அடிப்படையில் மனைப்பிரிவு மேம்பாட்டாளர்கள் திருவாளர்கள் கோபி அய்யாசாமி மற்றும் ஆர். கோபாலன் ஆகியோர் மேற்படி நாயன்மார் சுந்தரர் நகரில் அடங்கியுள்ள 164 மனைகளை பத்திர பதிவு செய்து விற்பனை செய்வதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின் வரைபடம் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

இணைப்பு: வரைபடம்—1

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
ஊராட்சி ஒன்றியம் திருநாவலூர்

பெறுதல் :

திருவாளர்கள் கோபி அய்யாசாமி மற்றும் ஆர். கோபாலன்,
187, 6—வது மெயின் ரோடு, நாகப்பா நகர்,
குரோம்பேட், சென்னை — 600 044.

28.12.17

நகல்: சார்பதிவாளர், திருநாவலூர்.

நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கள்ளக்குறிச்சி
தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: உதவி இயக்குநர் (நகர் மற்றும் ஊரமைப்புத்துறை), விழுப்புரம்.
தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது,



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate